TAMIL NA[DU] 5 -MAY 1972 MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1972 சனவரி 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Meeting of National Development Council

*111 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Minister for Education who represented Tamil Nadu in the National Development Council meeting held at New Delhi on 26th September 1969 impressed on the National Development Council the need to include Tamil Nadu in the list of Backward States; and

(*b*) if so, whether our Government's request was acceded to?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) 26—9—1969 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்ற முதலமைச்சர்களின் குழுக்கூட்டத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். இக்கூட்டத்தில், இதற்கு முந்தைய கூட்டங்களில் இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்த முன்னேற்றமடைந்ததாகக் கருதப்படும் மாநிலங்களிலும் பின் தங்கிய பகுதிகள் உண்டு என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில், தமிழ்நாட்டில் ஒரு மாவட்டம் தெரிந்தெடுக்கப்பட்டு அங்கு ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு உடனடி மானியம் அல்லது உதவித்தொகை வழங்க ஒத்துக் கொள்ளப்பட்டது. ஆயினும், இந்த அரசு ஒரு மாவட்டத்திற்கு ஈடாக அருகருகேயுள்ள சில பகுதிகளைத் தெரிந்தெடுத்து மத்திய அரசுக்கு அனுப்பியது. அவைகளைப் பின்தங்கிய பகுதிகளாக மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உதவி சபாநாயகர் அவர்களே. இதனுடைய விளைவாக பொருளாதார ரீதியில் எவ்வளவு தொகை அதிகமாகக் கிடைக்கும் என்று முதலமைச்சரவர்கள் கூற முடியுமா? இந்தத் தேசிய வளர்ச்சி மன்ற முதலமைச்சர்களின் குழுக்கூட்டத்தில் நம்முடைய மாநிலத்தின் சார்பாக வேறு முக்கியமான கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டனவா? அப்படியிருந்தால், அதன் விவரங்களைத் தெரிந்துகொள்ளலாமா?

[1972 சனவரி 29

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருளாதார ரீதியில் இப்பொழுது பத்து இடங்கள்—பத்து தாலுக்காக்கள்—பின் தங்கிய பகுதிகள் என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நாம் அங்கு வலியுறுத்திய முக்கியமான விஷயம், முன்னேற்றமடைந்துள்ள மாநிலங்கள் என்கிற அளவில் மாநிலங்களை அடியோடு முழுமையாக ஒதுக்கிவைத்துவிடக் கூடாது; முன்னேற்றமடைந்துள்ள மாநிலங்களிலும் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன; ஆகவே, அவைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தைத்தான் அரசு சார்பில் நாம் பல முறை வலியுறுத்தி வந்திருக்கிறோம். அதற்கேற்ப, முதலில் 'மாவட்டங்கள்' என்று சில மாவட்டங்கள் முழுவதுமாக ஒத்துக்கொள்ளப்பட்டன. பிறகு, மாவட்ட நிலையில் ஆராய்ந்த வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் சில பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இராமநாதபுரம், முதுகளத்தூர், சிவகெங்கை, பரமக்குடி, திருவாடானை, திருப்பத்தூர், மேலூர், திருமயம், ஆலங்குடி, கொளத்தூர் ஆகிய பத்து இடங்களையும், அதற்கு மேலாகக் கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், நாங்குனேரி, விளாத்திகுளம் ஆகிய ஐந்து இடங்களையும் பரிந்துரை செய்தோம். ஆனால், இறுதியாக, நான் சொன்ன ஐந்து இடங்களை விட்டுவிட்டு, முதலில் சொன்ன பத்து இடங்களை மட்டும் ஏற்றுக்கொண்டார்கள். இந்தக் கேள்வியில் மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல் எவ்வளவு பொருளாதார வசதி செய்யப்படுகிறது என்றால், ஐம்பது லட்ச ரூபாய்க்கு மேற்படாமல், நிலையான முதலீடு உள்ள புதிய தொழில் அமைப்பதற்கு மூலதன முதலீட்டில் பத்திலொரு பங்கு தொகையை மத்திய அரசு மொத்த மானியமாகவோ அல்லது உதவித் தொகையாகவோ அவர்களுக்கு அளிக்கின்றது. ஐம்பது லட்ச ரூபாய்க்கு மேற்பட்டு நிலையான மூலதன முதலீடு கொண்ட புதிய தொழிற்சாலை தொடங்குவதற்கு மானியம் அல்லது உதவித் தொகை அதனுடைய தகுதிக்கு ஏற்றவாறு மத்திய அரசு வழங்குகிற நிலை இருக்கிறது. இப்பொழுது ஒன்பது பேர் இந்தத் தொழிற்சாலைகளைத் துவக்குவதற்கு முன்வந்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்தப் பின் தங்கிய பகுதிகள் என்ற நிலை ஏற்றுக்கொள்ளப்பட்ட இடங்களில் தொழில் சலுகைகளைத் தவிர வேறு என்ன சலுகைகள் கிடைக்கின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது தொழில் சலுகைகளைப் பொறுத்த அளவிலேதான் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

1972 சனவரி 29]

திரு. எ. சுவாமிதாஸ் : பின்தங்கிய பகுதிகள் என்று சில பகுதிகளை முதலமைச்சரவர்கள் இங்குக் குறிப்பிட்டார்கள். தொழில் நிலைமையைப் பொறுத்த அளவில், கன்னியாகுமரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியையும் இந்தத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவர அரசு பரிந்துரை நல்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : படிப்படியாகக் கவனிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கெனவே தர்மபுரி மாவட்டத்தையும் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தையும் பின்தங்கிய பகுதிகள் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறதே அதற்கும் அப்பாற்பட்டு அவர்கள் அளிக்கும் சலுகையா இது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிழக்கு இராமநாதபுரம், தருமபுரி ஆகிய இரண்டும் பின்தங்கிய பகுதிகள் என்று வேறு நிலையில் அறிவிக்கப்பட்டு அவைகளுக்குத் தனியாக இரண்டு கோடி ரூபாய் அளவுக்குத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது வேறு.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in the last Budget in the list given by the Government, Dharmapuri district also finds a place as a backward area. But now in the list furnished by the Hon. Chief Minister the name of the Dharmapuri District has not been mentioned. May I know whether this district has been included in the list given to the Central Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பல மாவட்டங்கள் பின் தங்கிய மாவட்டங்கள் என்று தொழில்களைப் பொறுத்து அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மாவட்டம் இந்த பத்து சத வீதம் மானியமாகப் பெறுவதற்கு தெரிந்தெடுக்கப்படவேண்டும் என்று மத்திய அரசு முடிவெடுத்தது. அதிலே நம்முடைய மாநிலத்தில் எந்தெந்த பகுதியை நாம் அறிவித்தோம். அவர்கள் எது எதை ஒத்துக்கொண்டார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அண்மையில் தர்மபுரி மாவட்டத்தையும் இந்த இராமநாதபுரம் மாவட்டத்தோடு இணைத்து பத்து சத வீதத்திற்கு மானியம் கொடுப்பதற்கு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று திட்ட அமைச்சருக்கு நம்முடைய அரசின் சார்பில் எழுதப்பட்டது. அவர் அதற்குப் பதில் தந்திருக்கிறார். 'இப்போதைக்கு இது முடியாது; ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு மாவட்டம்தான் என்று முடிவு செய்திருக்கிறோம்; இது மறுபரிசிலனை செய்யப்படும் போது தர்மபுரியைப் பொறுத்தும் பரிசீலிக்கப்படும்' என்ற முறையில் நம்முடைய மாநிலத்திற்குப் பதில் தந்திருக்கிறார்.